(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 208/2017 அ.சா.16

| | | |
|---|---|---|
| Name | : | திரு. குணசேகரன் |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 25.08.2025.

(**A**1 **to A**3 – ஆஜர்.)

முதல் விசாரணை:-

நான் காவல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். 26.09.2014 ம் தேதி நான் நாகமலை புதுக்கோட்டையில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றினேன். அன்றைய தினம் நாகமலை புதுக்கோட்டை காவல்நிலைய குற்ற எண்.436/2014 வழக்கு சம்பந்தமான முதல் தகவல் அறிக்கையை 27.09.2014 ம் தேதி அதிகாலை சுமார் 2 மணியளவில் ஸ்டேசன் ரைட்டரிடமிருந்து பெற்று மதுரை, நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களிடம் போய் ஒப்படைத்தேன். மேலும் அதன் நகலை காவல்துறை துணை

தலைவரிடம் ஒப்படைத்தேன் மற்றும் அதன் நகலை உயர் அதிகாரிகளிடம் ஒப்படைத்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் கடவுச்சீட்டு பெற்று மேற்படி ஆவணத்தை கொடுத்தேன். கடவுச்சீட்டை ரைட்டரிடம் ஒப்படைத்தேன். அவர் பெயர் ஒச்சாத்தேவர். காவல்நிலையத்திலிருந்து நீதித்துறை நடுவர் அவர்களது குடியிருப்பு 10 கி.மீ. தொலைவில் உள்ளது. இரவு நேரம் என்பதால் 20 நிமிடத்தில் மேற்படி காவல்நிலையத்திலிருந்து நீதித்துறை நடுவர் அவர்களது குடியிருப்பிற்கு வந்துவிடலாம் என்று சொன்னால் அது சரியல்ல.

Sd/- குணசேகரன்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/- G.Muthukumaran
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.